
# இடைச்சொல்

**கேள்விகள் 1 - 2 வரை**

**கீழ்க்காணும் படங்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**



1. கடிகாரத்தின் அலாரம் அலறிக் கொண்டிருந்தது; ____________ மல்லிகா படுக்கையை விட்டு எழுந்தபாடில்லை.

   **A** இருப்பினும்/ஆயினும்
   **B** ஆகையால்/எனவே
   **C** ஆயினும்/எனவே
   **D** இருப்பினும்/ஆகையால்



2. பசுபதி ____________ ரகு ____________ பள்ளி முடிந்து நேரே கடைக்குச் சென்றான்.

   **i** ஓடு / உம்
   **ii** உடன் / உம்
   **iii** ஓடு / உடன்
   **iv** உம் / உம்

   **A** I, II　　**C** II, III
   **B** I, III　　**D** II, IV

**கேள்விகள் 3 - 12 வரை**

**கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

3. வேலை நேரத்தில் பேசுவதற்குக் கட்டுப்பாடு உள்ளது; ____________ ஓய்வு நேரத்தில் எவ்வளவும் பேசலாம்.

   **A** ஆனால்　　**C** மேலும்
   **B** அல்லது　　**D** ஏனென்றால்

4. விபத்துக்குள்ளான சந்தானம் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ____________ தான் மருத்துவரால் அவரைக் காப்பாற்ற முடிந்தது.

   **A** ஆகவே / எனவே
   **B** எனினும் / இருப்பினும்
   **C** ஆனால் / எனவே
   **D** ஆகவே / எனினும்

5. ரோஜா செடியில் முட்கள் அதிகம்தான். ____________ ரோஜா மலர்களைப் பறிக்காமலா இருக்கிறார்கள்?

   **A** ஏனெனில்　　**C** அதற்காக
   **B** ஆதலால்　　**D** ஆகவே

6. அங்கு வந்து கொண்டிருப்பது சேரனின் மகளா ____________ சோழனின் மகளா என்பது தெரியவில்லை.

   **A** ஆனால்　　**C** மேலும்
   **B** அல்லது　　**D** இன்னும்

LIVEWORKSHEETS
LIVEWORKSHEETS

7. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். ______________ நாம் சிறுவயதில் கற்கும் பழக்க வழக்கங்கள் சாகும் வரை நம்முடனே இருக்கும்.

A அதனால்
B இருப்பினும்
C ஏனென்றால்
D ஆகவே

8. அறநெறியுடன் ஆட்சி நடத்தியவன் மன்னன் நளன். ______________ சூதாட்டத்தால் தன் நாட்டை இழந்தான்.

A எனவே
B இருப்பினும்
C அதனால்
D ஏனெனில்

9. தமிழ் அரசர்கள் தமிழ் மீது பற்றுடையவர்களாய் இருந்தனர். ______________ அவர்கள் தமிழின் சிறப்பைப் பாடிய புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் அளித்தனர்.

I ஆதலால் III ஆகையால்
II எனவே IV இருப்பினும்

A I, II, III C I, III, IV
B I, II, IV D II, III, IV

10. நீ நன்றாக வாசிக்க வேண்டும்; ______________ எழுதவும் வேண்டும்.

A இருப்பினும்
B மேலும்
C எனவே
D அல்லது

11. கனத்த மழை பெய்தது. ______________ ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

A இருப்பினும்
B ஆகையால்
C ஆயினும்
D மேலும்

12. யானை பெரியது. ______________ 'டைனோசர்' அதனினும் பெரியது.

A எனவே
B அல்லது
C ஆனால்
D ஆகவே

LIVEWORKSHEETS
LIVEWORKSHEETS